**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 51** **நாள்: 16.04.2024**

**வாக்குச்சாவடி அலுவலர்களுக்காக 18.04.2024 அன்று நடத்தப்படும் மூன்றாம் கட்ட பயிற்சி வகுப்பில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் / கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 19.04.2024 அன்று நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான மூன்றாம் கட்ட பயிற்சி வகுப்பு 18.04.2024 அன்று (வியாழக்கிழமை) காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சி வகுப்புகளில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்கள் குறித்த விவரங்கள் அடங்கிய ஆணைகள் வழங்கப்படும்.

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 3,726 வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரியவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்டப் பயிற்சி வகுப்பு 24.03.2024 அன்றும், விடுபட்ட அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு 30.03.2024 அன்றும், இரண்டாம்கட்டப் பயிற்சி வகுப்பு 07.04.2024 அன்றும், இரண்டாம் கட்ட மறுபயிற்சி வகுப்பு 13.04.2024 அன்றும் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக, அனைத்து வாக்குச்சாவடி அலுவலர்களுக்கும் மூன்றாம் கட்ட பயிற்சி வகுப்பு 18.04.2024 அன்று (வியாழக்கிழமை) காலை 9.00 மணிக்கு கீழ்கண்ட 16 மையங்களில் நடைபெறவுள்ளது.

| வ. எண் | சட்டமன்றத் தொகுதி | பயிற்சி மையங்கள் |
|---|---|---|
| 1. | 11. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் | அரசு பாலிடெக்னிக் கல்லூரி,<br>இராதாகிருஷ்ணன் நகர், தண்டையார்பேட்டை,<br>சென்னை-81. |
| 2. | 12. பெரம்பூர் | டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக்கல்லூரி<br>எண்.45, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை,<br>வியாசர்பாடி, சென்னை-39 |
| 3. | 13. கொளத்தூர் | சென்னை உயர்நிலைப்பள்ளி,<br>எண்.38-42, பந்தர்கார்டன், சென்னை-11 |
| 4. | 14. வில்லிவாக்கம் | ஐ.சி.எப். மெட்ரிகுலேஷன் உயர்நிலைப்பள்ளி,<br>எண்.4629, ஐ.சி.எப். வடக்கு காலனி,<br>கொன்னூர், சென்னை-38 |

| | | |
|---|---|---|
| 5. | 15. திரு.வி.க.நகர் | சென்னை பெண்கள் உயர்நிலைப்பள்ளி<br>எண்.20, பள்ளிச்சாலை, மாதவரம் நெடுஞ்சாலை,<br>பெரம்பூர், சென்னை-11 |
| 6. | 16. எழும்பூர் | சென்னை பெண்கள் உயர்நிலைப்பள்ளி<br>எண்.3, இராட்லர் தெரு, சூளை,<br>சென்னை-112 |
| 7. | 17. இராயபுரம் | புனித பீட்டர் உயர்நிலைப்பள்ளி,<br>மேற்கு மாதா சர்ச் சாலை, இராயபுரம், சென்னை-13 |
| 8. | 18. துறைமுகம் | பாரதி அரசு கலைக்கல்லூரி,<br>எண்.1, பிரகாசம் சாலை, ஏழு கிணறு,<br>சென்னை-180 |
| 9. | 19. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி | என்.கே.டி. பெண்கள் உயர்நிலைப்பள்ளி,<br>டாக்டர் பெசன்ட் சாலை, சேப்பாக்கம்,<br>சென்னை-5 |
| 10. | 20. ஆயிரம் விளக்கு | சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>பள்ளிச்சாலை, நுங்கம்பாக்கம்,<br>சென்னை-34 |
| 11. | 21. அண்ணாநகர் | டி.ஜி. வைஷ்ணவா கலைக்கல்லூரி,<br>ஈ.வெ.ரா. பெரியார் நெடுஞ்சாலை,<br>எஸ்.பி.ஐ. அலுவலர் காலனி, அரும்பாக்கம்,<br>சென்னை-106 |
| 12. | 22. விருகம்பாக்கம் | மீனாட்சி பொறியியல் கல்லூரி,<br>12 வேம்புலியம்மன் கோவில் தெரு,<br>அண்ணாஜி நகர், கே.கே.நகர் மேற்கு,<br>விருகம்பாக்கம், சென்னை-78 |
| 13. | 23. சைதாப்பேட்டை | அரசு ஆண்கள் கலைக்கல்லூரி<br>நந்தனம், அண்ணாசாலை, சென்னை-41 |
| 14. | 24. தியாகராயநகர் | அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி<br>எண்.13, 54வது தெரு, 9வது அவென்யூ,<br>அசோக் நகர், சென்னை-83 |
| 15. | 25. மயிலாப்பூர் | இராணி மெய்யம்மை பெண்கள் மேல்நிலைப்பள்ளி<br>எண்.162, ஆர்.கே.மட் சாலை, மந்தைவெளி,<br>சென்னை-22 |
| 16. | 26. வேளச்சேரி | சென்னை உயர்நிலைப்பள்ளி<br>பாரதிதாசன் தெரு, திருவான்மியூர்,<br>சென்னை-41 |

மேலும், அனைத்து வாக்குச்சாவடி அலுவலர்களுக்கும் அவர்கள் கலந்துக்கொள்ள வேண்டிய பயிற்சி மையம் குறித்த விவரங்கள் குறுஞ்செய்தி (SMS) வாயிலாக அனுப்பி வைக்கப்படுகிறது. எனவே, நாடாளுமன்ற பொதுத்தேர்தல் பணிக்காக நியமனம் செய்யப்பட்டுள்ள அனைத்து வாக்குச்சாவடி அலுவலர்களும் 18.04.2024 (வியாழக்கிழமை) அன்று நடைபெறும் பயிற்சி வகுப்பில் தவறாமல் கலந்து கொண்டு தங்களுக்குண்டான வாக்குச்சாவடி விவரங்கள் அடங்கிய ஆணையினை பெற்றுக் கொண்டு தேர்தல் பணியினை செவ்வனே செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளாத வாக்குச்சாவடி அலுவலர்கள் மீது தேர்தல் நடத்தை விதிகளின்படி கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களும், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., அவர்களும் தெரிவித்துள்ளனர்.

**செய்தி வெளியீடு :இணை இயக்குநர் /மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**